ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ॥

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 18.] விபவ ஹூ, வைகாசி மீ [ஸஞ்சிகை 8

ஸ தேவதேவோ பகவாந் ப்ரதீக்ஷதாம் களேவரம் யாவதிதம் ஹிநோம்யஹம் ।
ப்ரஸந்நஹாஸாருணலோசநோல்லஸந்முகாம்புஜோ த்யாநபதஶ்சதுர்புஜ: ॥

[ஸ்ரீ பாகவதம், 1-9-23]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

## சாஸ்த்ரமும் அதன் ப்ராமாண்யமும்

(முன் தொடர்ச்சி 179-ம் பக்கம்.)

(வேதாந்த சிரோமணி தோட்டாலம் ஸ்ரீ. உப. வேணுகோபலாசார்யர்.)

அந்த வேதத்தை அநுஸரித்து ப்ரவ்ருத்தமானபடியாலும் அப்படிப்பட்ட வைதிகர்கள் பரிக்ரஹித்திருப்பதாலும் ஸ்ம்ருதி முதலியவைகளும் அப்படியே பிரமாணமாகும். ஆகையால் தான் பௌத்தன் முதலிய ஸ்ம்ருதிகளிலும் ஸத்யவசநம் பூததயை முதலிய சில அம்சங்கள் வேதாநுஸாரியா யிருந்த போதிலும், பிரத்யக்ஷ சுருதி விரோதம் ஜாஸ்தியாகக் காணப்படுவதாலும், வைதிகர்களின் பரிக்ரஹ மில்லாததாலும், வேதத்தின் பிராமாண்யத்தை அங்கீகரியாதவர்களாலேயே பரிக்ரஹிக்கப்பட்டிருப்பதாலும், அக்கிரந்தங்களில் வேத ப்ராமாண்யத்தை நிரஸ

பௌத்தாதிகளின் ஸ்ம்ருதி என் அப்பிரமாணம்.

நம் பண்ணியிருப்பதாலும் அவைகளுக்கு லுப்தமான வேதபாகங்களை மூலமாகக் கல்பிக்க வொண்ணாது. ஆகையால் அவைகள் ஸர்வாத்மநா அப்பிரமாணமேயாகும். இதனால் அவைகளும் ஸ்ம்ருதியாகையால் பிரமாணமாகாவா வென்பது அஸங்கதமாயிற்று.

ஸ்ம்ருதிகளில் பரஸ்பர விரோதத்தில் நிர்ணயம்.

பொதுவில் ஸ்ம்ருதிகளுக்குள்ளே பரஸ்பர விரோதமுண்டாம்போது 'ஊஙய-ஃ விவரீதா த-ு யா ஸூரதிஃ ஸா ந ஶஸஸ்ரீதெ' என்று மனுஸ்ம்ருதியுடன் விரோதமுண்டானால் மற்ற ஸ்ம்ருதி அநாதரணீயம். இதர ஸ்ம்ருதிகளுக்குள் விரோத முண்டாகுமானல் வைதிகர்களின் பரிகிரகம் எதற்கு ஜாஸ்தியிருக்கிறதோ அதை யொட்டி நிர்ணயம் செய்து கொள்ளவேண்டும். அப்பொழுது மற்றொன்றுக்கு வேறு தாத்பர்யம் கல்பிப்பதோ அதற்கநுகுணமாக இதை நயிப்பதோ செய்யவேண்டும். இது மாத்திரமன்றிக்கே அதிகிருதாநதிகிருதங்களுக்கு விரோதமானல் அதிகிருதம் பிரபலமாயும் அநதிகிருதம் துர்பலமாயுமாகும். அப்போது துர்பலத்திற்கு பாதமுண்டாகும். அதாவது சிரௌதத்திற்கும் மற்ற ஸ்மிருதிகளுக்கும் விரோத முண்டானல் யஜ்ஞாநுஷ்டான காலத்தில் சிரௌதம் பிரபலம். கால நிர்ணய விஷயத்தில் ஜியௌதிஷம் பிரபலம் என்றிவ்வாறு கண்டுகொள்வது. அவ்வாறே சுருதி ஸ்ம்ருதிகளுடன் விரோதிக்கும்போது ஆசாரம் மாத்திரம் அநாதரணீயம்.

வேதத்துடன் பாஞ்சராத்ரத்திற்கு விகல்பம்.

ஸ்ரீ பாஞ்சராத்ரங்களுக்கு மட்டும் சுருதியுடன் விரோத முண்டாம்போது தேச, கால, அதிகாரி அவஸ்தைகளின் பேதத்தையிட்டு விகல்பமே சொல்ல வேண்டும். ஏனெனில் யாதொரு படியாலும் தோஷ ஸம்பந்த மில்லாமை யென்பது வேதத்துடன் இதற்கும் துல்யமான படியால் வேதத்தில் பூர்வோத்தர விரோதம் வந்தபோது விஷய வியவஸ்தை சொன்னபடி பாஞ்சராத்ர வேதங்களிலும் விஷய வியவஸ்தை சொல்ல வேண்டுமே யல்லாது பரஸ்பரம் பாத்ய பாதக பாவம் கல்பிக்க இடமில்லை. வேதத்தில் ஒருக்காலும் புருஷ ஸம்பந்த மில்லாமையால் வக்தாவின் ஸம்பந்தத்தால் வரக்கூடிய தோஷம் அணுவேனும் எவ்வாறு இல்லையோ, அவ்வாறே பாஞ்சராத்ரத்திற்கும் வக்தாவின் ஸம்பந்தத்தாலுண்டாகக் கூடிய தோஷமொன்றுமில்லை. ஏனெனில் வேதத்தை அபௌருஷேயமென் றங்கீகரித்தபடி பாஞ்சராத்திரத்தை அபௌருஷேயமாக அங்கீகரியாம லிருந்தாலும் மற்ற ஸ்ம்ருதிகளைப்போல் இவைகள் கர்மவசியர்களான புருஷர்களால் செய்யப்பட்டவைகளல்ல. பின் என்னவென்றால் அவாப்த ஸமஸ்த காமனும் ஸர்வஜ்ஞனும் ஸத்ய ஸங்கல்பனும் பரம

காருணிகனாயு மிருக்கிற நாராயணனால், கேவலம் நம் போன்றவர்களின் விஷயத்தில் தயையால் பிரவர்த்திதமானவைகள். ஆகையால் மஹா புருஷனுடைய ஸம்பந்தத்தையிட்டு பௌருஷேயங்களேயானபோதிலும் ஒரு படியாலும் தோஷகந்த மில்லாமை யென்கிற காரணத்தை முன்னிட்டு இவைகள் வேத துல்யமே யெனலாயிற்று. வேதம் எவ்வாறு ஒவ்வொரு கல்பத்திலும் முன்னிருந்த ரீதியாலேயே பிரத்யக்ஷத்தில் கண்டு அப்ப்படிப்பட்ட ஆநுபூர்வி விசிஷ்டமாகவே உபதேசிக்கப் படுகின்றதோ, அவ்வாறே கல்பந்தோறும் அநாதியாக வுபதேசிக்கப்பட்டு வரும் பாஞ்சராத்ரமும் ஒவ்வொரு கல்பத்தினாரம்பத்திலும் முன்னிருந்த விஷயங்களை பிரத்யக்ஷீகரித்து பகவானால் ஸ்வதந்திரமான ஆநுபூர்வியுடன் உபதேசிக்கப் படுகின்றதாகும். இவ் விரண்டிற்கும் பரம புருஷனால் உபதேசிக்கப்படுகை யென்பது பொதுவாக விருந்தாலும் ஒன்றில் ஆநுபூர்வியிலும் ஈஷத்தும் மாறுதலில்லை யென்பதும், மற்றொன்றில் ஆநுபூர்வி மாறுகின்றது என்பதும் வேற்றுமைக்குக் காரணமாகும். ஆகையால் ஈச்வரனுடைய தயா மூலமாக பிரவிருத்தமானபடியால் இதற்கு மன்வாதி ஸ்ம்ருதிகளைவிட பலபடியினும் கௌரவ மதிகமேயுள்ளது.

**பிரம்ம சூத்திரத்திலும் பாஞ்சராத்ர ப்ராமாண்யமே யுள்ளது.**

இக்காரணம் பற்றியேதான் சாரீரக மீமாம்ஸையில் இரண்டாவது அத்தியாயம் இரண்டாவது பாகத்தில் ஸாங்க்யம் யோகம் பௌத்தம் ஜைநம் முதலிய மதங்களை நிராகரணம் செய்து பிறகு தந்திரம் என்கிற பெயரால் வழங்கப்படுகின்றபடியால் பாஞ்சராத்ர தந்திரமும் ஸாங்கியாதி தந்திரம்போல் அப் பிரமாணம் என்று நினைக்கும் சில மந்தமதிகளின் புத்தி வியாகுலத்தை நீக்க ‘உத்பத்த்யஸம்பவாத்’ என்றிது முதலான ஸூத்திரங்களால் பாஞ்சராத்ரத்திற்கு ஸர்வதோ முகமான பிராமாண்யத்தை ஸூத்திரக்காரர் ஸ்தாபித்திருக்கிறார். பிராமாண்யத்தை ஸாதிக்க வேண்டுமென்பதை யநுஸரித்துத் தான் அந்தப் பாதத்தில் பாசுபதாதிகரணாந்தமாக பிறர் மதங்களை நிராகரணம் செய்துவிட்டு அந்தப் பாதாந்தத்தில் பாஞ்சராத்ரத்தை விசாரித்தது. பிறர் மதங்களின் அப்ராமாண்யத்தை ஸாதிக்க பிரவிருத்தித்த பாதத்தில் பாஞ்சராத்ர பிராமாண்ய ஸாதநம் பொருந்தாதெனில், எவ்வாறு பிறர் மதங்களின் அப்பிராமாண்யம் ஸாதிக்கப்படுகிறதோ அவ்வாறே பாஞ்சராத்ராதிகரணத்திலும் பிறர் மதத்தின் அப்ராமாண்யமே ஸாதிக்கப்படுவதால் யாதொரு விரோதமுமில்லை. அதாவது ஸாங்கிய யோக பௌத்த பாசுபத மதங்களின் பிராமாண்யம், இங்கு பிறர்களுக்கு அபிமத மானபடியால் அதை நிராகரிக்க வேண்டியதாயிற்று. அப்படியே பாஞ்சராத்ர தந்திரத்

துக்கும் மற்ற தந்திரத்துக்கும் ஸமாநமாக அப்பிராமாண்யம் பிறர்களுக்கு அபிமத மானபடியால் அதை நிராகரிக்கிறார் என்று ஒரே ரீதியில் ஸர்வத்ர பரமத நிராகரணமே பாதார்த்தமென யாதொரு குறையுமில்லை. ஆனால் 'வேத விருத்த தந்திரங்களுக்கு அப்பிராமாண்யத்தைச் சொல்ல வந்த பாதத்தில் அடியிலிருந்து நுனி வரையில் ஸாங்கியம் முதலான தந்திரங்கள் அப்பிர மாணமெனச் சொல்லிக்கொண்டு வரும்போது அதில் ஒன்றாகச் சேர்த்த பாஞ்சராத்ராதிகரணத்தில் மட்டும் பாஞ்சராத்ரம் பிரமாணமெனச் சொல்ல லாகுமோ? மதாந்தரஸ்தர்களும் இவ்வதிகரணத்தை பாஞ்சராத்ரங்களின் அப்பிராமாண்ய பரமாகவே யோஜனை செய்திருக்கிறார்களே' எனில் அது ஸூத்திரகாரருடைய அபிப்ராயத்திற்கு விரோதமானது. ஸூத்ரக்காரா பிப்ராயத்தை நன்கு கவனிக்குமளவில் பாஞ்சராத்ரம் பிரமாணமென்பதற் காகவே இவ்வதிகரணம் பிரவ்ருத்தித்ததென்பது நன்கு விளங்கும். பிறர்கள் அவ்வாறு வியாக்யானம் செய்யாதது அவரபிப்ராயத்தை நன்கு உணராத காரணத்தாலேயே யாகும். அது எவ்வாறெனில்—அதை உபபாதிக்கிறோம்:

"க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும்।
கோஹ்யந்ய: புண்டரீகாக்ஷாத் மஹாபாரதக்ருத் பவேத்॥"

"ஸ்ரீவேத பாதரிகாஶ்ரமே பாதராயண ஸந்நிதௌ।
ஸ்நாநஶாஸ்த்ரவதீ ஸாத்ரும் ப்ரஹ்ம ஸூத்ரம் தவ॥"

என்றும் 'பாராஶர்ய வசஸ் ஸுதாம்' என்றும் இத்யாதிகளால் பாதராயண த்வைபாயன பாராசர்ய முதலான பதங்களால் வியவஹரிக்கப்படும் ஸ்ரீ வேத வியாஸரே பிர்ம்மஸூத்திர கர்த்தாவென்றும் அவரே மஹா பாரதத்திற்கும் கர்த்தாவென்றும் யாவரும் அங்கீ கரித்த விஷயம். அப்படி 'இஹ ஸர்வாஸ்ததத் ஸர்வ இஹாஹாஸ்த ஸமஸ்தே' என்று அதிற் சொல்லப்பட்ட விஷயங்களின் கௌரவத்தால் மஹாபாரத மென்றும் ஸர்வாத்மநா வேதவிரோதமில்லாமையாலே 'பாரத: பஞ்சமோ வேத:' என்று ஐந்தாவது வேதமாகவும் புகழப்பட்டிருக்கும் மஹா பாரதத்தில் சாந்திபர்வத்தில் 342-வது அத்தியாயந் தொடங்கி, 348-வது அத் தியாயமளவாக ஸ்ரீ பாஞ்சராத்ரத்திற்கு ஸர்வதோமுகமான பிராமாண்யத்தை நன்கு நிரூபித்து, பாஞ்சராத்திற்கு 'ஆச்ரயதோஷமில்லாமை, அது பிரவர்த் தித்த தேசவைலக்ஷண்யம், காலவைலக்ஷண்யம், பிரவர்த்தகன், வக்தா, சுரோ தா, பிரபந்தம், அதில் சொன்ன விஷயங்கள், அதை அநுஷ்டிக்குமவர்கள், அதன் பலம், பல பிரதாநம் பண்ணும் தேவதை, இவைகளின் வைலக்ஷண் யம், ஆகிய இவற்றைக் கொண்டு ஸர்வதோ முகமான கௌரவத்தையும்

ஸூத்ரகாராபிப்ராயத்தை மகா பாரதாநுகுணமாகச் சொல்ல வேண்டும்.

ஆகையால் இது வேத துல்யமே ஈஷத்தும் வேத விரோதமில்லையென்பதையும் நன்கு நிரூபித்திருக்கிறார். அதன் சுருக்கம் பின்வருமாறு:—

சாந்திபர்வம்—342-வது அத்யாயாரம்பத்தில் ம்ரஹஸ்தொ ஸ்ரூஹூ ஆஸீ அ வாநவூஷ்யொயஹிக்ஷுகஃ। உஷ்ஷதிஷிஸாஷூாத-ஂ ஷெவதாஂ காஂ யஜெத ஸஃ॥ (சாந்தி,342—1.) என்று ஸத்வோத்ர பாஞ்சராத்ரம் பரிம ரான யுதிஷ்டிரர் நான்கு ஆசிரமஸ்தர்களும் மோக்ஷ ஸித்திக்கு ஸாதநம். மடைய எந்த தேவதையை ஆச்ரயிக்க வேண்டுமென்றும் எவ்விதமாக அர்ச்சிக்கவேண்டுமென்றும் பொதுவில் பிரச்னம் செய்ய, ஸகல வேத ரஹஸ்யங்களையும் நன்கறிந்த ஸ்ரீபீஷ்மர், இவர் பாஞ்சராத்ரங்களில் கூறப்படும் பரமைகாந்தி தர்மத்தை கேட்கிறார் எனத் திருவுள்ளம்பற்றி,

மூஜஂஸஂ வூஸூவிக வூஸூஂ வூஷூஷெ கூவிஹாநவ। நஹெ்ஸ்ர தத்கூ-ஷுயா ஶகூஂ வக்தூ-ஂ வஷூ-ஶஷெ்தரவி। மஹநஂ ஹெஷ்தஷாவூா நஂ வூாவூாதவூஂ தவாஙிஹநு॥ சாந்தி 342—5 என்று இவ்விஷயம் மிகவும் ரஹஸ்யமென்றும் யுக்தியால் அறியத்தகுந்ததல்லவென்றும் கொண்டாடி விஷயத்தைப் பரக்கச்சொல்ல நினைத்து உபரிசரவஸுவின் உபாக்யானத்தை யாரம்பித்துச் சொல்லத் தொடங்கி,

சுவாஅூஶெ தவக்தவூ ஶாதுமஹூ-ஂஹூூப ஷநாததநு। தவஹக்திஶதொ ஸூஹூநு வகூஷூாஶி து-ஂயமாதயமு॥ 342—29. என்று அயோக்யர்களுக்கு இவ்விஷயம் சொல்லத் தகுந்ததல்லவென்றும் சொல்லி,

தத்ரூ வூஶாஷதொ ஶாஜ்யூஂ யஶெ-ஷணாவிதூவாதிநஃ। நாநரத்ர வாகூஉ-தூளா உஜொ உ-ஷஂஅ நாஹவகி। ஷஂஷூிதெ து-ஂ நரவெ தவிநு ஶாஹூஷெதத்நாததநு। சுஂதய-ஶாஹூதி தததூஂ ஷதவஃ கயிதஂ உயா। 343—27 என்று தார்மிக ஜனங்கள் நிறைந்த காலத்தில் தான் இந்த தர்மத்திற்கு பிரவிர்த்தி என்றும் மற்ற காலத்தில் இதற்குக் குறைவு என்றும் இப்படி ஸமய விசேஷங்களில் ஆவிர்ப்பாவமும் திரோபாவமும் சொல்வதால் வேதார்த்தம்போல் இப்பாஞ்சராத்ரார்த்தமும் அநாதியென்றும் தெரிவித்து,

வெஷெஷூத-ஂஹி-ஶ ஷூஂவிதஂ கூரதஂ ஶெஶஉ உஷொ௱ிரஉ। 343–29 என்று உலக மரியாதையை ஸ்தாபிக்கும் முநி ஜனங்கள் நிறைந்துள்ள மேருகிரியில் பிருவிருத்தமானதால் இது பிரவர்த்தித்த தேசத்தைக் கொண்டும் இதற்கு வைலக்ஷண்யத்தை நிரூபித்து,

ஷகாஂமூஉநஷொ ஷாஂதா உ-ஂநயஷூஂயஶெ ஶதாஃ 343—31 என்று இதற்கு பிரவர்த்தகர்களான ரிஷிகளின் சம தமாதி குணங்களைச் சொல்லி,

திவ்யம் வர்ஷ ஸஹஸ்ரம் வை ஸமேதா ருஷயஸ்ததா 343—35 என்பதால் அவர்களின் தபோமஹிமையையும்,

நாராயணாநுசிஷ்டா ஹி ததா தேவீ ஸரஸ்வதீ । விவேச தாநருஷீந் ஸர்வாந் லோகாநாம் ஹித காம்யயா ॥ 343–36. என்பதால் அவர்களுக்கு ஸரஸ்வதி பிராப்தி பகவத் பிரஸாதத்தாலே யென்றும் அதுவும் லோக ஹிதத்திற்காக வென்றும்,

ஸர்வேஷு ப்ரமாணம் ஹி ததா யதைதத் ஸாஸ்த்ரமுத்தமம் । 343–44 என்பதால் இதர பிரபந்தங்களின் பிராமாண்யத்தில் இது திருஷ்டாந்த மென்றும்,

ஹவிஷ்யதி ப்ரமாணம் வை மதநுஸாஸநம் । 343—45 என்பதால் ஸாக்ஷாத் பகவதாஜ்ஞா ரூபமென்றும்,

ஸ்வாயம்புவ மநுஸ்சைவ யக்ஷ்யதே உஸநா தர்மம் ஸ்வயம் । 343–45 என்பதால் மனு முதலியோருக்கு மிது உபஜீவ்ய மென்றும் சொல்லி,

உஸநா ப்ருஹஸ்பதிஸ்சைவ யதோத்பந்நௌ ஹவிஷ்யத: । ததா ப்ரவக்ஷ்யத: ஸாஸ்த்ரம் யுஷ்மந்மதிபிருத்ருதம் । 343—46 என்றும்

யுஷ்மத்க்ருதமிதம் ஸாஸ்த்ரம் ப்ராஜாபத்யோ வஸுர்ந்ருப: । ப்ருஹஸ்பதே ஸகாஸாத்வை ப்ராப்ஸ்யதே த்விஜஸத்தமா: ॥ 343—48 என்றும் உத்கிருஷ்ட தேவர்ஷி பரிகிரஹத்தையும் உத்கிருஷ்ட சிஷ்ய ஸம்பந்தத்தையும் சொல்லி,

இதம் ஸ்ரேய இதம் ப்ரஹ்ம இதம் ஹித மநுத்தமம் । தத: ப்ரப்ருதி காலாஹி லோகா: ப்ரஸ்ருதா க்ஷிதௌ ॥ 343–34 என்பதால் ப்ரவ்ருத்திலக்ஷணஸ்சைவ தர்மோ மோக்ஷஸ்ச' என்கிறபடி முதலில் த்ரிவர்க்க பிரதிபாதகமாய் பின் மோக்ஷ பிரதிபாதகமென்றும் பரமஹிதமென்றும் ஸர்வ வேதாந்த ரஹஸ்ய மென்றும் சொல்லி மேல் இப்படிப்பட்ட பாஞ்சராத்ர நிஷ்டனை உபரி சரவஸுவை,

தஸ்ய யஜ்ஞோ மஹாநாஸீத் அஸ்வமேதோ மஹாத்மந: 344—5. என்று அசுவமேதம் செய்ததாகச் சொல்வதால் ஓரதிகாரிக்கே வைதிக கர்மங்களிலும் பாஞ்சராத்ர கர்மங்களிலும் சேர அதிகார முண்டாகலா மெனவும் தெரிவித்தார். மேல்,

ப்ரீதஸ்ததோऽஸ்ய பகவாந் தேவதேவ: புராதந: । ஸாக்ஷாத்தம் தர்ஸயாமாஸ ஸோऽத்ருஸ்யோऽந்யேந கேநசித் ॥ 344—12. என்பதால் வைதிக கர்மங்களிலும் பாஞ்சராத்ர கர்மங்களிலும் ஸாக்ஷாத் பகவானே ஆராத்ய தேவதை யென்றும்,

ஃஶீரஶ்ய ஹரதோ ஹமோ ஜேவோ ஹரிஜயஹா । 344—13
என்று ஸர்வ தேவதைகளையும் காண வல்லனான பிருஹஸ்பதிக்கும் பகவான் பிரத்யக்ஷமாகாமல் உபரிசரவஸு காணும்படியாயிற் றென்றும் கூறப்பட்டது. மேல் பகவான் ஸேவை ஸாதிக்க வில்லையென்று பிருஹஸ்பதி கோபித்துக்கொள்ள ஏகதன் முதலானோர்கள் அவருக்கு பதில் சொல்லும் கிரமத்தில் எவன் விஷயத்தில் பகவானுக்கு அநுக்ரக முண்டாகிறதோ அவனுக்குத் தான் பகவத் தர்சநம் சக்யமென்று

நஸஃ ஸ ஃவயா ஊஷு ஃஹாவி ஃ ஈஹஹதெ। யஸ்ய
ப்ரஸாஃ குஃதெ ஸ வெ தம் ஊஷு ஃஹதி' 344—25. என்பதால் சொல்லி இதனால் மற்ற அதிகாரிகளைவிட பகவத் தர்ம நிஷ்டன் உத்கிருஷ்டாதிகாரி யென்றும் சொல்லப்பட்டது. ஒரு ஸமயம் அவர்கள் பகவானைக் காணவேண்டி வடதிசை சென்று வெகுகாலம் தவம் புரிந்த பின் ஓர் அசரீரி வாக்கு தோன்றி 'நீங்கள் க்ஷீர ஸமுத்திரத்திற்கு வடக்காலே சுவேதத்வீபத்திற்குவந்தால் அவ்விடத்தில் பகவத் ஸ்வரூபத்தைக் காணலாம்' என்று சொல்லும்போது

ஜெனொஃதர ஹமெது க்ஷீரொஃஸ்யொதுகஃ। ஸ ஜெ
மொ யஃ நஸஃ தவஃ வஃஜாஃ। 344—28. ஸகாஃ நஹெ
வஃஷாஃ ஸ்வெதஜீவ நிவாஸிநஃ। மஹூமும் தஃ ஊநய ஹஃஃ ஜெ
வூகாஃஃ॥ 344—34 என்று பகவத் தர்ம நிஷ்டர்கள் வஸிக்கும் தேசம் கேவலம் தபோபலத்தால் லப்யமாகுமென்றும் சொல்லப்பட்டது. பின் அவர்கள் சுவேத த்வீபம் சென்றதும்

தஹோஃஃரஷிவிஷய ஃஹா வூதிஹதொஃஹவஃ। 344—37
என்று இவர்களுக்கு கண் தெரியாமல் போய்விட்டதென்பதால் இதர தர்ம நிஷ்டர்கள் பகவத்தர்ம நிஷ்டர்களைக் காண முடியாதென்றும், பின் இவர்கள் அங்கு அநேக காலம் தவம் செய்ய

வூதாவஸாநெஸ்ய ஃஹாஃஃஃஃரஃஃஃ வயழ। 344—39
என்று விசேஷ தபஸால் அவர்களைக் காணலாகிற்றென்றும்,

ஃஃஃ கிஞ்ஞொவஹீயதெ தஸ்ய ஜெவஸ்ய தைதஃஃ। வயம்
து தெஜஸா தஸ்ய ஸஹஸா நஷ்டதஸஃ॥ 344—46 என்று பகவான் தானாக வந்து அவர்களுக்கு தர்சநம் கொடுப்பதால் அவர்களின் மாஹாத்ம்யமும் ஃஹாஃ ஃஃஃநஸா அக்ஷுஃஷா வாவுவஜெயஃ॥ 344—54 என்பதால் அவர்களுக்கு இதராதி காரிகளிடமிருக்கும் அநாதரமும் சொல்லப்பட்டன. மேல் இவர்கள் அங்கு வெகு நாள் தவம் செய்த பிறகு,

ஒரஷா வ: வானஷா: ஶ்வேதா: ஸவெ-ஒநிய விலஜி-ஒதா:। ஒரஷொ ஹவதி ஜெவெஶ ஸஹிஒர-ஒஷெ விஒஜொத்தெஜ:। 344—57 என்று அசரீரி வாக்கு தோன்றி 'நீங்கள் இந்த மஹா புருஷர்களைக் காணுவீர்கள். அதனால் பகவானைக் கண்டதற்குச் சமானமாகும்' என்று சொல்லிற்று. இதனால் இவர்களின் தர்சனம் பகவத் தர்சன துல்ய மெனலாயிற்று.

மேல்—346-வது அத்யாயாரம்பத்தில்

வ்ராவஷ் ஶ்வேதம் உஹாவீவம் நாரஷொ ஹமவாநரஷி:। ஒஒஶ-ஒ தாநெவ நராநு ஶ்வேதாம்ஶ்ரு ஊஸச வ்ருஹாநு। வமிஜயாஉாஸ ஶிரஸா உநஸா நெஶ்ரு வமிஜித:॥ 346—1 என்று ஒரு ஸமயம் நாரதர் அங்கு சென்று அவர்களைக் கண்டு துதித்தா ரென்பதால் அவர்கள் தேவர்ஷிகளாலும் கொண்டாடத் தகுந்தவர்க ளென்றும், மேல்

நஹெ்யதஜ் ஬்ரஹ்ணா வ்ராவ்த ஶிஷ்ரஶம் உச ஒஶ-ஒநஓ। 346—58 என்று பகவான் நாரதருக்கு ஸேவை ஸாதிக்கும்போது இந்த ரூபத்தை பிரம்ம தேவனும் கண்டதில்லை யென்பதால் பகவத்தர்ம நிஷ்டர் பிரம்மாவை விட உத்கிருஷ்டர் என்றும்,

உவாஅ ஊயாணாம் ஹமியொ மஹ்வு நாரஷ உாஹிநஓ। ஸகாம்ஸ்ரா ஷ்ஙியம்தொ உாம் நெஷாம் விவொஹவெஷிதி॥ 347—19. என்பதால் நாரதருடன் ஸம்பாஷணமும் அவர்களின் தியானத்திற்கு இடையூறுகு மென்றும், அதனால் நாரதாதிகளை விட அவர்கள் பகவானுக்கு மிகவும் அந்தரங்கர்கள் என்றும் சொல்லப்பட்டது. அப்படியே இதன் உபஸம்ஹாரத்திலும்,

உஷம் உஹொவ நிஷஷம் அதாவெஒஷ ஸாஉிதஓ॥ ஸாம்வஷ்யொமகூரதாம்தெந வஹுராஸ்ராந பஶ்ரிதஓ॥ 348—62. என்று பாஞ்சராத்ர சாஸ்திரம் மிகவும் ரஹஸ்யமென்றும் ஸகல வேதஸாரமென்றும் ஜ்ஞாநயோக கர்ம யோகங்களில் தேர்ந்தவர்கள் இதைப் பஞ்சராத்ர மெனச் சொல்வது வழக்கமா யிருக்கிறதென்றும் பகு முகமாகப் புகழப்பட்டிருக்கிறது. அப்படியே மேல்—

சுயம்ஹி ஒானநஷெ்யொ ஶொக்ஷய உ-ஒ ஸநாதந:। யம் ஹிஸ்வா ஶெவதாஸ்வ-ஒா: ஸவஷ்கவஷ் ஹாஜொஹவநு॥ 349-9. என்று இந்தப் பரமைகாந்தி தர்மம் தேவதைகளாலும் அநுஷ்டிக்க முடியாததென்றும்,

நமிநஜெ காஷ்ரியஜெஒாயம் ஶ்ரெஷ்ஶொ நாராயணவிர்ய:। ஸகாஷிநொஹி வானஷா மஹ்வுஷி வரஜெவெஜெ॥ 358—4. என்பதால் இத்தர்மம், நாராயணனுக்கு மிகவும் பிரியமென்றும் இதற்கு பலம் மோக்ஷமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

யத்யேகாந்திபிராகீர்ணம் ஜகத் ஸ்யாத் குருநந்தந । பவேத் க்ருதயுகப்ராப்திராஶீ:கர்மவிவர்ஜிதா ॥ 358—63. என்று இந்த ஸூக்ஷ்ம தர்ம நிஷ்டர்கள் கிடைப்பார்களேயாகில் அதைக் கிருதயுகமாகப் பாவிக்க வேண்டுமென்றும்,

பஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயண: ஸ்வயம் । ஸர்வேஷு ச ந்ருபஶ்ரேஷ்ட ஜ்ஞாநேஷ்வேதேஷு த்ருஶ்யதே । யதாகமம் யதாந்யாயம் நிஷ்டா நாராயண: ப்ரபு: 359—68. என்று இதற்கு பகவானே ஸாக்ஷாத் பிரவர்த்தகன் என்றும் மற்ற தந்திரங்களையும் ஸமீசீந யுக்திகளைக் கொண்டு யோசித்தால் அவைகளுக்கும் நாராயணனிடத்திலேயே பர்யவஸாநமேற்படும் என்றும் சொல்லி,

பஞ்சராத்ரவிதோ யே து யதாக்ரமபரா ந்ருப । ஏகாந்தபாவோபகதாஸ்தே ஹரிம் ப்ரவிஶந்தி வை ॥ 359–72 என்றும், ஏகாந்தபாவோபகதாஸ்த்வேகாந்தா: பாபவர்ஜிதா: । தே ஸஹஸ்ரார்சிஷம் தேவம் ப்ரவிஶந்தி ஸநாதநம் ॥ என்றும் இந்தப் பரமைகாந்தி தர்மமே விபவதாநமின் றிக்கே மோக்ஷ பிரதமென்றும் அதன் மூலமான இவ்வதிகாரியின் வைலக்ஷண்யமும் சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ரஹ்மஸூத்ரபதைஶ்சைவ ஹேதுமத்பிர் விநிஶ்சிதை: । என்று பகவத் கீதையில் ஸமீசீந நியாயங்களுடன் (யுக்திகளுடன்) கூடிய பிரம்ம ஸூத்திரங்களாலும் இவ்வர்த்தம் பிரதிஷ்டிதமா யிருக்கிற தென்று ஸாதித்த ஸ்ரீ வேதவியாஸரே, மோக்ஷ தர்மத்தில்,

தத்த்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபி: ஸர்வதோமுகை: । தத்த்வமேகோ மஹாயோகீ ஹரிர்நாராயண: ப்ரபு: ॥ 357—88 என்று 'தத்வ' சப்தத்தாலும் 'ஜிஜ்ஞாஸமாந' சப்தத்தாலும் தத்வ சப்தம் பரப்பிரம்ம வாசகமான படியால் 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்கிற விடத்திலிருக்கும் ப்ரஹ்ம சப்தத்திற்கும் ஜிஜ்ஞாஸா சப்தத்திற்கும் பிரத்யபிஜ்ஞை தோன்றுவதாலும், ஹேதுபி: ஸர்வதோமுகை: என்பதால் 'ப்ரஹ்மஸூத்ரபதைஶ்சைவ ஹேதுமத்பி:' என்றபடி ஈக்ஷதேர்நாஶப்தம் என்று தொடங்கி 'அநாவ்ருத்திஶ்ஶப்தாத்' என்ற வடிவாகவிருக்கும் ஸூத்திரங்களிலிருக்கும் பஞ்சம்பந்த பதங்களுக்கு பிரத்யபிஜ்ஞை ஏற்படுவதாலும் இந்த சுலோகத்தால் 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்றாரம்பித்து பிரவிருத்தமான சாரீரக சாஸ்திரத்தில் ஸமீசீந ஹேதுக்களைக்கொண்டு ஸாக்ஷாத் நாராயணனே பரதத்வம் என்று நாம் நிர்த்தாரணம் செய்திருக்கிறோம் என்று சொல்வதாலும், தம்மால் நிர்த்தாரணம் செய்யப்பட்டுள்ள பரமைகாந்தி தர்மாநுஷ்டாநத்திற்கும் அதற்கு பிரதிபாதகமான பாஞ்சராத்ரங்களுக்கும் அதன் பிராமாண்யத்

துக்கும் பிரம்ம ஸூத்திரம் எள்ளளவேனும் விரோதமாயிருக்கக் கூடாதான படியால், 'பாஞ்சராத்ர பிராமாண்ய நிராகரணத்திற்கே பாஞ்சராத்ராதிகரணம் ஏற்பட்டது' என்ற பிறர்களின் வியாக்யானம் ஸூத்ரக்காரரின் அபிப்ராயத்திற்கு முற்றிலும் மாறானதென்பது யாவருக்கும் ஸ்பஷ்டமாகும்.

மற்ற ஸாங்கியாதி சாஸ்திரங்களோ வென்றால் பிரமம் தவறுதல் முதலிய தோஷ ஸம்பாவனை யுள்ளவர்களால் செய்யப்பட்டபடியால் அவை வேத விருத்த பாகங்களில் அப்பிரமாணமே.

ஸாங்கியாதி சாஸ்திரங்களுக்கு விசேஷம்.

வேத விரோதமானது அநுஷ்டான விஷயத்தில் விரோதமென்றும் தத்வ விஷயத்தில் விரோதமென்றும் இரு விதமாயிருக்கும். அவற்றில் ஸாங்க்ய யோக பாசுபதங்களில் சில தத்வ விஷயங்களில் ஸ்வரூபத்தில் விரோதமில்லாமலிருந்தாலும் அநுஷ்டான விஷயத்தில் விரோத மதிகமாயுள்ளது. அதாவது ஸாங்கியர்களுக்கு பிரகிருதி புருஷ விவேகத்தால் மோக்ஷம். வேதாந்திகளுக்கோ பகவதுபாஸநத்தால் மோக்ஷம். அப்படியே தத்வ விஷயத்திலும் ஈசுவரனுக்கு உபாதாந காரணத்வ மங்கீகரியாதது மற்றொரு விரோதம். அவ்வாறே யோகத்திலும் தியாநத்தை மோக்ஷஸாதநமாக அவர்கள் அங்கீகரித்தாலும் த்யாநிக்கப்படவேண்டிய வஸ்துக்களில் ஜீவாத்மாவை பிரம்மாத்மக மாகவும் ஈசுவரனை ஜகதுபாதானமாகவும் அங்கீகரியாததாலும் அநுஷ்டானத்தில் வைஷம்யமும், அப்படியே அவ்வீசுவரன் கேவல நிமித்த காரணமென்றே அங்கீகரிப்பதால் தத்வத்திலும் வைஷம்யமுமுள்ளது. பாசுபதத்திலும் சில விடங்களில் விரோத மில்லாதது போல் காணப்பட்டாலும் முமுக்ஷுவுக்கு உபஜீவ்யமான பாகம் யாதொன்று மில்லாமையாலும் நிஷித்தாநுஷ்டானமே பகுளமா யிருப்பதாலும் பராவர தத்வங்களை விபரீதமாகக் கொண்டிருப்பதாலும் பிரம்மத்துக்கு உபாதாந காரணத்வத்தை யங்கீகரியாததாலும் பாசுபதம் அத்யந்தம் அநாதரணீயமாயிற்று. இவ்வனாதரம் தோற்றுவதற்காகவே சாரீரக மீமாம்ஸையில் ஸாங்கிய யோகங்களை நிராகரித்தவுடன் இதற்கும் நிராகரணம் ஸங்கதமாயிருக்க, இதை அங்கு நிராகரிக்காமல் பௌத்தாதிமதங்களை நிராகரித்த பிறகு நிராகரித்தது. சைவ விசிஷ்டாத்வைதத்தில் பிரம்மத்திற்கு உபாதாநத்வ நிமித்தத்வங்களை யங்கீகரிக்கிறார்களே யானாலும் நன்கு பராமர்சிக்குங்கால் நாராயணாவஸ்தனான சிவனுக்கு உபாதாநத்வமும் ஸாக்ஷாத் சிவனுக்கு நிமித்தத்வமும் என்று அவர்கள் நிர்வஹிப்பதால் வாஸ்தவத்தில் அவர்களும் நிமித்தோபாதாநத்வங்களை ஒரிடத்திலேயே அங்கீகரித்ததாகச் சொல்வதற்கில்லை.

ஸாங்க்யம் யோக: பாஞ்சராத்ரம் வேதா: பாஶுபதம் ததா । ஆத்ம ப்ரமாணாந்யேதாநி ந ஹந்தவ்யாநி ஹேதுபி:' என்று வேத பாஞ்சராத்ரங்களுக்கு துல்யமாக பாசுபதாதிகளையும் சொல்லி யிருக்கிறதே யெனில், அங்கும் 'யதாகமம் யதாந்யாயம் நிஷ்டா நாராயண: ப்ரபு:' என்று நியாயாநுக்ருஹீதமான அந்தந்த ஆகமங்களிற் சொல்லப்பட்ட வஸ்துக்களுக்கு நாராயணனிடத்தில் பரியவஸாநம் என்று சொன்ன ரீதியில், அந்தந்த ஆகமோக்தமான வஸ்து ஸ்வரூபத்தை ஸ்வீகரிப்பதில் பௌத்தாதி கிரந்தங்கள் போல் ஸாங்கியம் முதலியவைகளுக்கு அப்ராமாண்யம் சொல்ல வேண்டியதில்லை யென்பதில் தாத்பரியம். வேதத்துடன் விரோதித்தால் அப்ரமாணமே. ஆகையால்தான் வேத விரோதமில்லாத விடங்களில் கேவல யுக்திகளால் நிரஸிக்கவேண்டாம் என நினைத்து 'ந ஹந்தவ்யாநி ஹேதுபி:' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விஷயம் முழுவதும் கீழ்க்கண்டுள்ள ஸ்ரீ ஆளவந்தாரருளிச் செய்த சுலோகத்தில் சுருக்கமாகக் காட்டப்பட்டிருக்கிறது.

உக்தம் நாநாப்ரதிபதிநிவஹாஸ்ஸந்ததஸ்த்யேந
ஜ்ஞாநைஶ்வர்ய: பரமபுருஷ: பாஞ்சராத்ரம் வ்யதத்த ।
தத்வேதத்வப்ரதிவ்யவஹிதப்ரேக்ஷதந்த்ரஸ்ஸாரம் ।
பாதஞ்சேதத ப்ரஸஜதி ததா ஸாத்வதாஸ்த்வ ஸாத்வதா: ॥

இதனால் பாஞ்சராத்ரமும் தந்திரமானபடியால் மற்ற பாசபதாதி தந்திரங்களுடன் ஸமாநமாகவே இதன் கௌரவமுமிருக்க வேண்டுமென்று சொல்வது முற்றிலும் அஸங்கதமென்னலாயிற்று.

இவ்வாறாக சாஸ்திரத்தின் தத்வமும் அதன் கௌரவமும் அதன் பிராமாண்யமிருக்கும் வகையும் முன்னோர்களின் கொள்கையை யநுசரித்துச் சுருங்க விவரிக்கலாயிற்று.

ஸ்ரீ:

# ஸம்சயோச்சேதிநீ ஸமர்த்தநம்.

[ஸ்ரீ. உப. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர், ந்யாய சிரோமணி]

—:o:—

நடந்த ப்ரபவஸு மாசி மாதத்தில் வெளிவந்த தீபிகையில், அடியேன் எழுதியிருக்கும் ஸம்சயோச்சேதிநிக்கு ஸம்சயத்தை உச்சேதநம் செய்யும் தன்மையில்லையென்று ப்ரதிஜ்ஞா மாத்ரமாய் எழுதி, ‘தத்வபோதிநீ’ என்று பெயரிட்டு ஸ்ரீ. உப. தட்டை ஸ்வாமி எழுதியிருக்கும் கடிதத்தைப் பார்த்தேன். அதிலிருந்து, அடியேன் எழுதின விஷயம் அந்த ஸ்வாமியின் திருவுள்ளத்தில் படவில்லையோ, அல்லது அதை அந்த ஸ்வாமி நன்றாய்க் கடாக்ஷிக்கவில்லையோ, என்று எண்ண இடம் ஏற்படுகிறது. ஸம்சயோச்சேதிநியைப் பார்த்த பிறகு ஷெடி ஸ்வாமிக்கு வ்ருத்தி அடைந்த ஸம்சயம் இரண்டு என்று அக்கடிதத்தினால் ஏற்படுகிறது. அதில் முதல் ஸம்சயத்தை ‘ப்ரஹ்மண: அபிந்நேத்யாதி பெயர் யார் இட்டனர்? என்று கேள்வியாகக் கேட்டுக் கொண்டு ‘அடியேனே இட்டது’ என்று தீர்மானித்திருக்கிறார். அது தத்வமன்று. ஸ்ரீ புள்ளம்பூதங்குடியில் நடந்த 17-வது வார்ஷிக மஹாஸங்கத்தில் “ப்ரஹ்மண: அபிந்நநிமித்தோபாதாநத்வம்” என்ற விஷயத்தை அடியேன் உபந்யஸிக்க வேணுமென்று ஸ்ரீ. உ. வே. ஸத்கார ஸபாத்யக்ஷ ஸ்வாமி அடியேனை நியமித்தார். அந்தப் பெயர் ஷெடி ஸ்வாமி இட்டருளினாரோ, அல்லது ஸபையோர்கள் கார்யதர்சி மூலம் இட்டருளினர்களோ அடியேனுக்குத் தெரியாது. அவ்வர்ஷத்திய ஸங்கத்தின் உபந்யாஸ கால நிர்ணயக பத்ரிகையிலும் அப்பெயரே அச்சிடப்பட்டிருக்கிறது. ஆனால், தீபிகையில் ஷெடி விஷயத்தை அச்சிடும்போது அப்பெயரை அச்சிடாமல் “பகவானுடைய ஜகத் காரணத்வம்” என்று அச்சிட்டிருப்பானேனென்னில், அதற்கு தீபிகைதான் பதில் சொல்ல வேணும். அச்சிடும் போது விஷயத்தின் பெயர் எளிதில் புரியுமாறு அச்சிடப்பட்டால் தான் எல்லாருக்கும் அதை வாசிக்க ப்ரவ்ருத்தி உண்டாகும் என்று அச்சிட்டிருக்கலாமோ என்று நினைக்கிறேன். ஆகவே பெயர் அடியேன் இடவில்லை. இடப்பட்ட பெயர் அடியேன் சொல்லப் புகும் விஷயங்களுக்கு ஒத்து அழகாய் அமைந் திருப்பதைப் பார்த்தும், பதங்கள் ஒவ்வொன்றும் வாஸ்தவ ப்ரயோஜநவத்தாக இருக்க வேண்டியதை உத்தேசித்தும், மேலே சொல்லப்போகிற அர்த்தங்களின் ஸூசநம் இதிலிருக்க வேண்டியதை அநுஸரித்தும் ஸித்தாந்தத்திற்கும் சப்த சாஸ்த்ரத்

திற்கும் விரோதம் இல்லாத விக்ரஹவாக்யம் எழுதினேன். இதைத்தான் "அடியேன் எழுதியபடி" இத்யாதி வாக்யத்தில் எழுதியிருக்கிறேன்.

அதில் இரண்டாவது ஸம்சயம் 'வக்ஷ்யமாணார்த்த' என்ற விடத்தில் உண்டாயது. அதற்கு உத்தரம்; 'வக்ஷ்யமாணார்த்த (இதர மதவ்யாவ்ருத்த ஸ்வமதஸார) ஸூசநமும்' என்று எழுதியனுப்பி இருந்தேன். அச்சில் "வ" என்பதற்கு "ல" இருந்ததோடு ( ) இந்த அடையாளம் விட்டுப்போய் விட்டது. ஆகவே 'வக்ஷ்யமாணார்த்த' என்பது ஸூசநத்தில் அந்வயிக்கிறது. வக்ஷ்யமாணார்த்தஸ்ய ஸூசநம் என்று பொருள். வக்ஷ்யமாணார்த்த மென்னவென்றால், அதைக் காட்டுகிறது ( )இந்தக் கோட்டிற்குள் அடங்கின வாக்யம். அதாவது, இதர மதவ்யாவ்ருத்த ஸ்வமதஸாரம் வக்ஷ்யமாணார்த்தம் என்றதாயிற்று.

ப்ரஹ்ம கட ஸம்யோக ரூபமான ஒரே கார்யத்தைக் குறித்து நிமித்தத்வமும் உபாதாநத்வமும் ப்ரஹ்மத்திற்கு வைசேஷிகாதிகள் ஒப்புக்கொண்டாலும், அபிந்ந தர்மாவச்சிந்ந கார்யத்தைக் குறித்து அவர்கள் அதை ஒப்பவில்லை. ஈச்வர நிஷ்ட நிமித்த காரணதா நிரூபகதாவச்சேதகம் கார்யத்வம்; தந்நிஷ்டோபாதாநதா நிரூபகதாவச்சேதகம் தாத்ருச ஸம்யோகத்வம். அதாவது ஸம்யோகத்வாவச்சிந்ந கார்யதா நிரூபித நிமித்த காரணதாச்ரயத்வம் ஈச்வரனுக்கு இல்லை. கிம்து, தாத்ருச ஸம்யோகத்தைக் கார்யத்வேந எடுத்துக் கொண்டு தம் வ்ருத்தி நிமித்த காரணத்வ முண்டு என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஈச்வரன் ஸாதாரண காரணமானபடியால் ஸாதாரண காரணத்வம் கார்யத்வாவச்சிந்ந நிரூபித காரணத்வ ரூபமானபடியால் ஈச்வரனுக்கு யாத்ருச தர்மாவச்சிந்ந நிரூபித உபாதாநத்வம் தாத்ருச தர்மாவச்சிந்ந நிரூபித நிமித்தத்வம் அவர்கள் ஒப்பவில்லை. அடியேன், அபிந்ந பதத்தைக் காரணபரமாக யாராவது அபிப்ராயப்பட் டிருந்தாலும் அவ்விடத்தில் "ப்ரஹ்மண:", என்ற பதம் இருந்திராது என்று எழுதி யிருந்தும், 'ப்ரஹ்மண:' என்ற பதம் இல்லாத விடத்திலுள்ள விக்ரஹ வாக்யத்தை எடுத்து எழுதி யிருப்பது வ்ருதாயாஸமே. மற்றப்படி ப்ரதிஜ்ஞா மாத்ரமாய் எழுதியிருப்பதற்கு மறுபடியும் பதில் எழுதுவது புநருக்தமாகும்.

2. உபாதாநத்திற்கு அபாதாந ஸம்ஜ்ஞை விதிக்கவே யில்லை என்கிறார். "ஜநிகர்த்து: ப்ரக்ருதி:" என்ற ஸூத்ரத்தால் ப்ரக்ருதிக்கு அபாதாந ஸம்ஜ்ஞை விதித்திருக்கிறார். அவ்விடத்தில் ப்ரக்ருதி சப்தம் ஹேது மாத்ர பர மென்று சிலரும் உபாதாந மாத்ர பர மென்று சிலரும் அபிப்ராயப்பட் டிருக்கிறார்கள். இதை அந்த ஸ்வாமியும் எழுதியிருக்கிறார். ஆகவே உபாதாநத்திற்கும் அபாதாந ஸம்ஜ்ஞை விதிக்கப்பட்டதாக ஏற்படவில்லையா? "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே, யதோவா

भूतानि ह्येतानि जायन्ते' इति श्रुतेः जनिकर्तुः प्रकृतिरिति विशेष स्मरणाच्च प्रकृतिलक्षण एवापादाने पञ्चमी " என்பது சங்கர பாஷ்யம்.

பஞ்சமீ ப்ரக்ருதியால் (அதாவது, பஞ்சமீ விபக்திக்கு ப்ரக்ருதியாக விவக்ஷிக்கப்பட்டதினுல்) என்று ப்ரயோகிக்க வேண்டியதற்குப் 'பஞ்சம்யந்த பதத்தினுல்' என்று ப்ரயோகித்துப் பிற்காலத்தில் பஞ்சமீ எந்தப் பதத்தின் மீது வருமோ அந்தப்பதம் பஞ்சம்யந்தபதம் என்ருல் 'णाच्च' என்பது பஞ்சம்யந்த மாகிருப்போலே 'णात्' என்பதும் பஞ்சம்யந்தமாக ப்ரஸங்கிக்கும். 'सर्वं सर्वज्ञं' என்ற விடங்களிலும் விவக்ஷித்து பஹ்வதிப்ரஸங்கங்கள் வரும். வ்யாகரணுபிஜ்ஞரான இந்த ஸ்வாமி இதை நன்ருய்ப் பராமர்சிக்க வேணும்.

3. மூன்ருவது ஸம்சயத்திற்கு அடியேன், 'இஷ்டாநந்யதா ஸித்தியையே ஜ்ஞாபகமாக விவக்ஷிக்கலாம்; அப்படியே அபிப்ராயப் பட்டிருக்கிருர்கள்' என்று க்ரந்த புரஸ்ஸரம் எழுதியிருக்க, அதற்கு ஒன்றும் ஸம்பந்த மில்லாமல் வரிசையாகப் புஸ்தகங்களின் பெயரை மட்டில் எழுதுவது அழகா? இப் புஸ்தகங்களும் இதற்கு மேற்பட்ட புஸ்தகங்களும் இருக்கின்றன வென்று யாருக்குத் தெரியாது? அடியேனுக்குத் தெரியாமல் போனுலும் அடியேன் உதாஹரித்த க்ரந்தகாரர்களுக்குக் கூடவா தெரியாது! ஜ்ஞாபகமிருந்தால் யோக விபாகம் ஆச்ரயிக்கக் கூடாது, இஷ்டாநந்யதா ஸித்தியையோ அதவா ப்ரயோகாந்யதாநுபபத்தியையோ ஜ்ஞாபகமாகச் சொல்லக் கூடாது என்று மேற் குறித்த க்ரந்தங்களிலிருக்கிறதா? அப்படியே இருந்தால் அடியேன் எடுத்த க்ரந்தம் எப்படி ஸங்கதமாகும்? அவர்கள் வ்யாகரண க்ரந்த கந்தங் கூட இல்லாதவர்களாகவன்ருே ப்ரஸங்கிக்கும்? அந்த க்ரந்தங்களுக்கு ஒரு வழியும் காட்டாமல் "இது விஷயத்தில் சர்ச்சையே வேண்டாம்" என்ருல் என்ன அர்த்தமோ? இதுதான் தத்வத்தைப் போதிக்கும் வழிபோலும்!

இப்படி யிருக்க, "அதற்கு உத்தரம், அந்த ஸ்வாமி வாக்ய மெல்லாம் ஒருவித அபிநிவேசத்தை வெளியிடுகின்றது" என்கிருர். அபிநிவேசமில்லாதவர்களே லோகத்தில் கிடையா. ஆனுல் அதில் த்யாஜ்யம் துரபிநிவேசம். அதை யாருடைய வாக்யம் வெளியிடுகின்றதோ? தீபிகாபிமாநிகளும் தீபிகையும் தான் தீர்மானிக்க வேணும். ஆகவே இவ்வளவாலும் மறுபடியும், அடியேன் எழுதினது ப்ரமாண பதவியைக் கொஞ்சமும் அதிக்ரமிக்கவில்லை என்பதை ஸங்க்ரஹமாகக் காட்டினேன்.

[இதனுடன் இந்த விஷயத்தின் சர்ச்சையை நிறுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிருேம். ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகர்.]

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ॥

# ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் வார்ஷிக மஹா ஸங்கம்.

## மதுராந்தகத்தில் நடந்த ஸபை விவரம்.

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் 18-வது வார்ஷிக மஹா ஸங்கம் இவ்வர்ஷம் சென்ற சித்ரைமீ 9, 10-ந்தேதிகளில் (ஏப்ரல் 21, 22) பூர்வாசார்யர்கள் உகந்தருளின மதுராந்தகம் என்னும் திவ்ய தேசத்தில் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் திருவடி வாரத்தில் அவன் திருவுள்ளம் உகக்க நடந்தேறிற்று. மஹா ஸங்கம் கூடிய ஸந்நிவேசமும், வைதிக கோஷ்டியும், பகவத் ஸேவையும், பாகவத ஆராதனமும் பகவத் ஸ்வரூப குண விபூதிகளைப்பற்றிய உபந்யாஸங்களும் இரண்டே தினங்கள் நேர்ந்தனவாயினும், அங்கு எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுக்கு அத்யந்தம் ஆஹ்லாதகரமாக விருந்தன. ஏராளமான ஆஸ்திக ஸ்ரீவைஷ்ணவர்கள் பரஸ்பர ஹிதைஷிகளாக அங்கு ஸேவை ஸாதித்தது 'கலியும் கெடும், கண்டு கொண்மின்' என்ற ஆழ்வார் அநுபவத்தை ஒத்திருந்த தென்னலாம். வித்வான்களான புத்தங்கோட்டஹம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி இஞ்சிமேடு ரங்கநாதாசார்யஸ்வாமி குடவாசல் நரஸிம்மாசார்யர்ஸ்வாமி தில்லையம்பூர் சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி சேரங்குளம் வரதாசார்ய ஸ்வாமி காரப்ங்காடு வெங்கடாசார்ய ஸ்வாமி தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி முதலிய வைதிகர்களும், ராவ்பகதூர் எஸ் வரதாசார்யர் ஸ்வாமி வி, வி. வெங்கடரமண அய்யங்கார் ஸ்வாமி (எம். எல், வி.) வேளூர் சின்னஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி (வக்கீல் செங்கல்பட்டு) டி. ராஜகோபாலாசார்ய ஸ்வாமி (சப் ஜட்ஜ் செங்கல்பட்டு) நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ வாஸுதேவாசார்ய ஸ்வாமி என். கோபாலஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி முதலிய லௌகிக ப்ரமுகர்களும் ஸபைக்கு வந்திருந்தனர். மஹா மஹோபாத்யாய ஸ்ரீ உ. கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி முதல் தினம் அக்ராஸநம் வகிப்பதாக விருந்தும் அந்த ஸ்வாமி சில எதிர்பாராத அஸௌகர்யங்களால் அவ்விதம் எழுந்தருளக்கூடவில்லை யென்பதாக தெரிவித்ததன் பேரில் ஸ்ரீ உப புத்தங்கோட்டஹம் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமியே இரண்டு தினங்களிலும் அக்ராஸநம் வஹித்தார்.

முதல் தினத்தில் காலை 8 மணிக்கு மஹாஸங்கம் ஹைஸ்கூல் ஹாலில் கூடியதற்கு முன்னதாக அக்ராஸந ஸ்வாமியும் மற்ற ஸ்வாமிகளும் கோஷ்டியாக ஸ்ரீ சக்ர

வர்த்தித் திருமகன் ஸந்நதிக்குச் சென்று எம்பெருமானை ஸேவித்துப் பிரஸாதம் பெற்றுக் கொண்டனர். பிறகு அக்ராஸந ஸ்வாமி பூர்ண கும்பத்துடனும் ஸ்வஸ்தி வாசனத்துடனும் ஸத்கார ஸப்யர்களால் வரவேற்றப்பட்டு ஊர்வலமாக ஸபை கூடும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ஸத்கார ஸபை அத்யக்ஷரும் மாஜி டிப்டி கலெக்டருமான ஸ்ரீ உப ராவ் ஸாகிப் எ. ராமாநுஜாசார்யஸ்வாமி ஸ்வாமிகளை வரவேற்று சுருக்கமாக ஒரு உபந்யாஸஞ் செய்தார். அதன் ஸாராம்சமாவது:—

" இந்த மகாசபையை அலங்கரிக்கத் திருவுள்ளம் பத்திய அசேஷ ஸ்வாமிகள் சந்நிதியில் பிரணம பூர்வமாக விக்கியாபனம் செய்து கொள்ளுகிறேன். அடியேன் பாக்ய வசத்தால் ஸ்வாமிகளை ஸ்வாகத பிரச்னை செய்ய நேர்ந்திருப்பதற்கு சந்தோஷிக்கிறேன். இந்த ஸ்தானத்தை வகிக்க அடியேனுக்கு எவ்விதத்திலும் யோக்கியதை கிடையாது. சம்பிரதாய விஷயங்களில் தேர்ந்த மகான்களுடைய சமூகத்தில் அக்கியனான அடியேன் உபன்யசிக்க ஆரம்பித்தது பரிஹாச ஆஸ்பதமே. ஆயினும் அடியேனை நியமித்ததற்கு வரவேற்புக் கமிட்டியாருக்கு அடியேனிடத்தில் இருக்கப்பட்ட பிரீதியினாலே யொழிய யோக்யதா விசேஷத்தைப்பற்றி யன்று. அடியேன் விக்கியாபிக்கும் இரண்டொரு விஷயங்களை மழலைச் சொல்லாகவும் கிளியின் வாக்கியங்களாகவும் திருவுள்ளம் பத்தவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

இந்தப் புண்ய பூமி விசேஷ புராண ஸ்தலம். இதற்கு வகுளாரண்ய க்ஷேத்திரம் என்கிற நாமம் உண்டு. விபண்டகமகரிஷி அநேக வருஷ காலங்கள் பெருமாளை இந்த ஸ்தலத்தில் ஆராதித்து வந்தார். இந்த விபண்டகர் குமாரர்தான் தசரத சக்கரவர்த்திக்கு புத்திர காமேஷ்டி யாகம் செய்வித்தவர். ஸ்ரீராமபிரான் அயோத்திக்கு எழுந்தருளின காலத்தில் தான் முன்னால் விபண்டகருக்கு வாக்களித்திருந்தபடி விமானத்திலிருந்து பிராட்டியை கைப்பிடித்துக்கொண்டு இறங்கி மகரிஷிக்கு சேவை சாதித்தார். அதே பிரஸ்தானமாக அர்ச்சையாக சக்கரவர்த்தித் திருமகன் இப்போதும் சேவை சாதிக்கிறார். இந்த விசேஷங்கள் எல்லாம் பிரம்ம கைவர்த்த புராணத்தில் 6 அத்தியாயத்தில் விவரிக்கப்பட் டிருக்கிறது. கிருஷ்ணாவ தாரத்திலும் இந்த அர்ச்சா ரூபியான பகவானை பலராமன் கிருஷ்ணன் இவர்கள் ஆராதித்ததாக அதே புராணத்தில் சொல்லப்பட் டிருக்கிறது. இதன்னியில் இதே க்ஷேத்ரத்தில் நம்மிட சம்பரதாய தர்சன ஸ்தாபகரான ஸ்ரீ பாஷயகாரருக்கு பஞ்ச ஸம்ஸ்காரம் பெரிய நம்பிகளிடம் திருச்சந்நிதியின் கீழடியில் நடந்தது. ஸ்ரீ மணவாள மாமுனிகளும் இந்தத் திவ்ய தேசத்தின் மகிமையை இரண்டு பாசுரங்களில் புகழ்ந்து சொல்லியிருக்கிறார். யாதவ பிரகாசர் பூர்வ ஜன்மத்தில் உடும்பாக இருந்து உத்தர ஜன்மத்தில் யாதவ பிரகாசரானர் என்கிற விஷயம் எல்லா ஸ்வாமிகளுக்கும் தெரிந்த விஷயமே. ஷை உடும்பு இந்தப் புண்ய பூமியில் ஏரிக்கரையில் வசித்துக்கொண்டிருந்ததாகவும் ஏதோ ஒரு தினம் ஒரு மகா புருஷனுடைய உச்சிஷ்டம் தனக்குக் கிடைத்த பாக்கியத்தால் பிராம்மண ஜன்மம் கிடைத்து உடையவர் திருவடி சம்மந்தமும் பெற்று இருக்கிறார். சக்கரவர்த்தித் திருமகனுக்கு ஏரிகாத்த இராமன் என்கிற நாமமும் உண்டு. அதற்கு அத்தாக்ஷியாக சுமார்

150 வருஷங்களுக்கு முன் பிளேஸ் என்கிற கலெக்டரால் கட்டி வைக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ ஜனகவல்லித் தாயார் சந்நிதியில் இருக்கும் சிலா சாஸனங்களால் விளங்கும்.

இப்படிப்பட்ட க்ஷேத்திரத்திற்கு எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளுக்கு சிரமம் பல விதத்திலும் உண்டு. ரூக்ஷமான சூரிய தாபத்தால் உண்டாகும் சிரமத்தையும் பாராட்டாமல் ஏள்ளினது பகவதாசாரிய சேவார்த்தம் என்று ஊகிக்க வேண்டியதே யொழிய வேறொன்றும் கிடையாது. ஆகையால் சௌகரியக் குறைவுகள் எவ்வளவு நேர்ந்தாலும் அடியேன்களுடைய சக்திக் குறைவினாலேயே என்று திருவுள்ளம்பற்றி க்ஷமிக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன். அதிருஷ்ட வசத்தால் இந்த சமயம் எம்பெருமானார் திருவவதார உற்சவ காலத்தில் நடைபெறுவது எல்லாருடைய பாக்கியமே. இத்துடன் ஸ்தல விசேஷத்தை நிறுத்தி கர்த்தவ்யாம்சத்தை யோசிக்கலாம். சம்ப்ரதாய அபிவிருத்திக்காக இந்த சபை அநேக திவ்ய தேசங்களிலும் இதர இடங்களிலும் அப்போதைக் கப்போது நடந்துவருகிறது. இப்பொழுது இங்கே நடைபெறுவது இவ்விடத்தில் இரண்டாவது சபையாகும். சபை பூர்த்தியானவுடன் சபை நடந்த இடத்தில்கூட சம்பரதாயமான விஷயங்களைப்பற்றி விசேஷசர்ச்சை நடப்பதாக ஒன்றும் தெரியவில்லை. கிளைச்சபைகள் ஏற்பாடு செய்து பிரதிநிதிகளைக் கொண்டு நோக்கங்களை பூர்த்தி செய்விக்க வேண்டிய மார்க்கங்களைத் தேடவேண்டியது. பிராம்மண அப்ராஹ்மண விரோதக் கக்ஷியினால் உண்டாகும் ஆபத்துகள் ஒருபக்கம் இருக்க, சம்ரதாயத்துக்கு ஹானிகரமான இதர கஷ்டங்களும்உண்டாகிக்கொண்டுவருகிறது.தேவஸ்தானங்களைக்குறித்த EndowmentAct, ருதுமதி விவாகத்தைக்குறித்த சட்டசபை மசோதாக்கள் விசேஷ கஷ்டத்தை விளைவிக்கக் கூடியவையே.சம்பரதாய பேதங்களால் வைஷம்யங்களை அதிகமாய்ப் பாராட்டுவதாலேயே ஷெடி கஷ்டங்களுக்கு இடம் உண்டாகிறது. ஆகையால் ஸ்ரீ வைஷ்ணவ சமூகத்தில் இருக்கப்பட்ட எல்லாசம்ப்ரதாயஸ்தாளும் ஏகமுகமாய்இருந்து சம்ப்ரதாயஅபிவிருத்திக்கு வேண்டிய விஷயங்களை உபக்கிரமித்தாலொழிய சௌகரியக் குறைவுகள் நேராமல் போகாது. இனி காலதாமசம் செய்வதில் அடியேனுக்கு அபிப்பிராயம் கிடையாது.

விசேஷ பண்டிதாள் எழுந்தருளி அலங்கரித்திருக்கிற இந்த சபையில் அந்த ஸ்வாமிகள் முகமாய் க்ரஹிக்கவேண்டிய விஷயங்கள் பகுவாய் இருக்குமாகையால் அடியேன் காலதாமசம் செய்வதற்கு எவ்விதத்திலும் அருகனல்ல. அசேஷ ஸ்வாமிகள் கிருபை செய்து இந்த மகாசபையை நிர்விக்னமாக நடப்பித்து அடியேன்களை அனுக்கிரக்க ரொம்பவும் பிரார்த்திக்கிறேன்."

இப்படி வரவேற்று உபந்யாஸம் முடிந்த பிறகு ஸ்ரீ அஹோபிலமடம் அழகிய சிங்கர் மஹா ஸங்கத்தை அநுக்ரஹித்து அனுப்பிய பின்வரும் ஸ்ரீமுகம், வித்வான் ஸ்ரீ உப இஞ்சிமேடு ரங்காநாதாசார்யர் ஸ்வாமியால் ஸபையில் வாசிக்கப்பட்டு அர்த்தமும் உபந்யஸிக்கப்பட்டது.

நாநாஶாஸ்த்ர விசக்ஷணை: ஸதஸ்யஜநை: விஷ்ணுஸேவாதிநை:

ஶாஸ்த்ரோக்தநிமஜ்ஜதகவிநிவஹவ்யாகல்ப்யகாலே ஸதா !

𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌦𑍍𑌯𑌂 𑌸𑌦𑌸𑌿 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑍈𑌭𑌵 𑌸𑌂𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾
𑌗𑍋𑌷𑍍𑌠𑍀 𑌶𑍍𑌰𑍀𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌤𑍇 𑌵𑌿𑌜𑌯𑌤𑌾𑌂 𑌚𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌂 𑌸𑌦𑌾 ॥

𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌾𑌰𑍍𑌯 𑌯𑍋𑌗𑌿 𑌵𑌰𑍍𑌯𑍇𑌣
𑌸𑌂𑌶𑍀𑌲𑌿𑌤𑍈𑌃 𑌸𑌕𑌲𑌕𑌲𑌾 𑌵𑌿𑌦𑍍𑌭𑍍𑌰𑌮𑌣𑍈𑌃 ।
𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑌕𑌰𑌾𑌵𑍍𑌯𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾
𑌗𑍋𑌷𑍍𑌠𑍀𑌯𑌂 𑌸𑌾 𑌵𑌿𑌜𑌯𑌤𑌾𑌤𑍍 𑌸𑌹𑌸𑍍𑌰𑌵𑌰𑍍𑌷𑌂 ॥

பிறகு அக்ராஸநாதிபதி வித்வான் புத்தங்கோட்டஹம் ஸ்வாமி இரண்டு மணி நேரம் போல் உபந்யஸிக்கையில் ஸ்ரீ ராமாவதாரத்தின் மஹிமையை எடுத்துக் கூறினர். ஸ்ரீமத் ராமாயணத்தைக் கொண்டு ஸ்ரீ விசிஷ்டாத்வைத மதத்தின் தன்மையை விளக்கி மனிதனின் உத்தம வாழ்க்கை எத்தகையதாகவிருக்க வேண்டுமென்பதை எடுத்துக் கூறினர். தற்காலம் ஹிந்து ஸமூகமும் முக்கியமாக பிராமண ஸமூகமும் மிகவும் அதிருப்திகரமான நிலைமைக்கு வந்து விட்டதைக் குறித்து மிக வருந்தி ஜனங்கள் வர வர விஷய பரர்களாய் அத்யாத்ம உணர்ச்சியையே அடியுடன் இழந்து வருகின்றனரென்றும், இதனால் மஹரிஷிகளாலும் மஹான்களான ஆசாரியர்களாலும் உபதேசிக்கப்பட்டு வந்துள்ள ஸநாதனமான ஹிந்து தர்மமே ஆபத்தான நிலைமைக்கு வந்திருக்கிறதென்றும், இதை மகா ஜனங்கள் உணர்ந்து தர்ம சிந்தையும் அனுஷ்டானத்தையும் அதிகரிக்கப் பிரயத்தனஞ் செய்ய வேண்டுமென்றும், இல்லாவிட்டால் சமூகம் சீர்கெட்டு ஜனங்களுக்கு இன்னும் கஷ்டம் அதிகரிக்குமே தவிர நன்மையொன்று மேற்படுவதற்கில்லை யென்றும் சொன்னர். முடிவில் ஹிந்து கன்னிகைகள் விவாஹ விஷயமாக வயதை நிர்ணயஞ் செய்து மதத்தில் சிரத்தையும் சம்பந்தமுமில்லாதவர்கள் கட்டாயமாகச் சட்டஞ் செய்வதாகவும் அவ்விதம் நடக்கா வண்ணம் ஹிந்து ஜனங்கள் ப்ரயத்நம் செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

மீண்டும் மாலை கூடியதும், வித்வான் ஸ்ரீ உப இஞ்சிமேடு ரங்கநாதாசார்யார்ஸ்வாமி ஸ்ரீபாஷ்யகாரரின் அவதாரம் என்ற விஷயமாகமிகவும் விஸ்தாரமாகவும்உருக்கமாகவும் ஒரு உபந்யாஸம் செய்தார். ஸ்ரீபாஷ்யகாரரின் மேன்மையை அவர் விஸ்தாரமாக எடுத்துக் கூறி அவர் பரம கருணாமூர்த்தியாக ஸமூகத்திற்குச் செய்த பரமோபகாரத்தை விஸ்தாரமாக எடுத்துக் கூறினர். பிறகு வித்வான் தில்லையம்பூர் சக்ரவர்த்தியாசாரியார் ஸ்வாமி ஸ்ரீ பாகவதத்தில் சில அம்சங்களை எடுத்துக்கூறி ஸாமான்யமாகத் தோன்றும் ஸ்ரீ கிருஷ்ண லீலைகளின் அத்யாத்ம விசேஷார்த்தங்களை சபை ரஞ்சமாக விஸ்தாரமாக எடுத்துப் பேசினர். இத்துடன் மகாநாடு கலைந்து மீண்டும் மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கூடிற்று. வித்வான்களான சேரங்குளம் வரதாச்சாரியார் ஸ்வாமி தட்டை ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி வில்லிவலம் ஸ்ரீநிவாசாரியார் ஸ்வாமி கொடவாசல் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி முதலியவர் ஸம்பிரதாய சம்பந்தமான பல அரிய விஷயங்களை எடுத்து உபந்யஸித்தனர்.

## தீர்மானங்கள்;

பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக மகா ஸங்கத்தில் நிறைவேற்றப் பட்டன.

(1) இந்தியா சட்டசபையில் கன்னிகை விவாஹ மசோதாவொன்று ஸ்ரீமான் ஹரி விலாஸ சாரதாவால் கொண்டுவரப்பட்டுள்ள விவாஹ வயது மசோதாவையும், சென்னை சட்டசபையில் இதே விஷயமாகநிறைவேற்றியுள்ள ஸ்ரீமதி முத்துலக்ஷிமியின் தீர்மானத்தையும் சென்னை மாகாண ஸ்ரீ வைஷ்ணவர்களடங்கிய இம்மகாநாடு பலமாகக் கண்டிக்கிறது. இம்மாதிரிச் சட்டம் ஹிந்துக்களுடையவும் முக்யமாக ப்ராஹ்மணர்களுடையவுமான மதாசாரங்களில் தலையிட்டு அவற்றைக் கெடுப்பதாக இருப்பதாக இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(2) இவ்விதம் சட்டஞ்செய்யக் கல்வியினாலோ, பழக்கத்தினாலோ மகா ஜன ஆக்ஞையினாலோ எவ்விதத்திலும் அதிகாரம் பெறாத சட்டசபையினர், ஒரு சிறுபான்மை வகுப்பு அதன் மனச்சாட்சிக்கும் நம்பிக்கைக்கும் விரோதமாக இச்சட்டத்தை ஏற்குமாறு நிர்ப்பந்திக்கும் செய்கையை இக்கூட்டம் பலமாக நிராகரிக்கிறது.

(3) ராஜப் பிரதிநிதியும் சென்னை கவர்னரும் இவ்விஷயத்தில் தலையிட்டு இம்மசோதா சட்டமாகாமல் செய்யவேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது. சென்னை கவர்னரைக்கண்டு பேச ஒரு தூது அனுப்புவதென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(4) கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய ஸ்வாமிகளும், ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியர் போன்றவர்களும் இம்மசோதாவுக்கு எதிராகப் பலத்த முயற்சிகள் எடுத்துக்கொண்டிருப்பதை இக்கூட்டம் பாராட்டுவதுடன் ஹிந்து வகுப்பு வைதீக பொது ஜனங்கள் எல்லோரும் இனித் தங்கள் மத விஷயங்களில் அன்னியர் இஷ்டப்படி தலையிட்டுக் கெடுக்காதவாறு எல்லாவித முயற்சியும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

(5) சென்னை சர்வகலாசாலை அதிகாரிகள், பி. ஏ. ஆனர்ஸ் பரீக்ஷையிலும், பி.ஏ. யிலும் விசிஷ்டாத்வைத பாடம் வைப்பதாகத் தீர்மானித்திருப்பதைக் குறித்து இம்மகாநாடு,பாராட்டுவதுடன் இந்த ஸித்தாந்தம் இன்னும் பிரசுரமாகுமாறு ஆராய்ச்சி ஏற்பாடு, சர்வகலாசாலை உபந்யாசங்கள் முதலிய ஏற்பாடு செய்யவேண்டுமாறு அவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

(6) சென்னையில் ஸ்ரீ வைஷ்ணவ மாணவர்கள் சரியான்படி மதாநுஷ்டானம் பெறவேண்டி அவர்களுக்கென ஒரு போஜனசாலை யேற்படுத்த வேண்டுமென்றும் இது சம்பந்தமாக ஒரு திட்டம் தயாரிக்க ஒரு கமிட்டி நியமிப்பதென்றும் தீர்மானிக்கிறது.

அதன் பிறகு வித்வான்களுக்கு ஸம்மானங்கள் விநியோகிக்கப்பட்டு, மஹா சங்கத்தை இவ்வளவு விசேஷமாக நடத்திவைத்து பரோபகாரஞ் செய்த ஸத்கார ஸப்யர்களுக்கும், ச்ரமத்தைப் பாராது மஹா சங்கத்திற்குப் பலபாகங்களி லிருந்தும் எழுந்தருளி உபந்யாஸங்கள் செய்து உபகரித்த வித்வான்களுக்கும் மற்ற ஸபையை அலங்கரித்த

ஸ்வாமிகளுக்கும் அக்ராஸந ஸ்வாமிக்கும் க்ருதஜ்ஞதாவிஷ்கரணஞ்செய்ய, மஹா சங்கம் ஸாயங்காலம் பூர்த்தி யடைந்தது.

சில நிர்பந்தங்களினல் மஹா சங்கத்திற்கு எழுந்தருளக்கூடவில்லை யென்றும் மஹா ஸங்கம் நன்கு நடைபெறவேண்டுமென்று பிரார்த்திப்பதாகவும் பின்வரும் ஆப்தஸ்வாமிகள் மஹா ஸங்கத்திற்குப் பத்திரிகை யனுப்பி யிருந்தனர்.

ஸ்ரீ உப. டி கோதண்டராமய்யங்கார் ஸ்வாமி, எ. வி. கோபாலாச் சாரியர் ஸ்வாமி, ராவ்ஸாகிப் டி. எஸ். ஸ்ரீநிவாஸ ராகவாச்சார்யர் ஸ்வாமி (பந்தர்) வேதாந்தமயங்கார் ஸ்வாமி (திருவையார் சமஸ்கிருத கலாசாலை அத்யக்ஷர்) வித்வான் ஆர். வி. கிருஷ்ணமாச்சார்யா ஸ்வாமி, வித்வான் சக்ரவர்த்தி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி கும்மட்டித்திடல் கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி (திருக்குடந்தை) டி. இ. சடகோபாசார்ய ஸ்வாமி (திருப்பாப்புலியூர்) வக்கீல் வீரராகவாச்சாரியர் ஸ்வாமி (நாமக்கல்) வி. என். செல்லமய்யங்கார் ஸ்வாமி (சேலம்) பி. எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி (பரமக்குடி.)

## ஸ்ரீ. வை. ஸி. ஸபையின் நிர்வாஹக் கூட்டம்.

ஸ்ரீ. வை. ஸி. ஸபையின் வார்ஷிக நிர்வாஹக் கூட்டம் சித்திரை மீ 10 உ மதுராந்தகம் ஸ்கூல் ஹாலில் மத்யாந்ஹம் 2-மணிக்கு நடைபெற்றது ஸபையின் 17-வது வர்ஷத்திய நிர்வாக யாதாஸ்து (இது தீபிகையின் முன் ஸஞ்சிகையில் வெளியாகி யிருக்கிறது) படிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. பிறகு அடுத்து வரும் வருஷத்திற்கு பின்வருமாறு நிர்வாஹக் கமிட்டி யங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

### போஷகர்.

ராவ்ஸாகிப் ஸ்ரீ உ. வே. டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் டில்லி.

### ஸபாத்யக்ஷர்.

ஸ்ரீ உ. வே. வ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், சென்னை.

### ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள்.

ஸ்ரீ. உ. வே. எஸ். ராஜகோபலாசார்யர் (மன்னார்குடி.)
,, டி. கோதண்டராம அய்யங்கார் (தஞ்சை.)
,, எ. வி. கோபாலாசாரியார் (திருச்சி.)
,, வி. பாஷ்யமய்யங்கார் (மதுரை.)
,, ஸி. வி. வெங்கடரமணய்யங்கார் (கோயமுத்தூர்.)
,, ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் (திருவல்லிக்கேணி.)
திவான்பகதூர் வி. ராமபத்ர நாயுடுகாரு, தொட்டப்ப நாய்க்கனூர் ஜமீன்தார்.

### கார்யதர்சிகள்.

ஸ்ரீ. உ. வே. எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார் (மயிலாப்பூர்.)
,, எஸ். லக்ஷ்மிநரஸிம்மாசாரியார் (திருவல்லிக்கேணி.)

போக்கிஷதாரர்.

ஸ்ரீ உ. வே. கே.வி. க்ருஷ்ணமாசாரியர் (திருவல்லிக்கேணி.)

நிர்வாஹக கமிட்டி மெம்பர்கள்.

ஸ்ரீ. உ. வே. நடாதூர் என். ஸ்ரீநிவாஸாசாரியர், புரசைவாக்கம்.
,, ராவ்ஸாகிப் டி. ராமாநுஜய்யங்கார், திருவல்லிக்கேணி.
,, கெ. டி. ஸுந்தரராஜாசாரியர், முத்தியாலுபேட்டை.
,, எ. ரங்கஸ்வாமி ஸரஸ்வதி, திருவல்லிக்கேணி.
,, டி. வி நீலமேகாசார்யர், கீழ்ப்பாக்கம்.
,, டி. ஆர். ராஜகோபாலாச்சார்யர், புரசைவாக்கம்.
ஸ்ரீமான் எஸ். வெங்கடாசலம் பிள்ளை, புரசைவாக்கம்.
ஸ்ரீ. உ. வே. எஸ். வராஹஸ்வாமி அய்யங்கார், திருவல்லிக்கேணி.
,, பி. என். ஸ்ரீநிவாஸாசாரியர், மயிலாப்பூர்.
,, டி. இ. சடகோபாசாரியர், திருப்பாப்பிலியூர்.
,, என். டி. ஸ்ரீ ராமாச்சாரியர், ,,
,, சக்ரவர்த்தி வி. ஸ்ரீநிவாஸாசாரியர் கும்பகோணம்.
,, கும்மட்டித்திடல் ஜி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கும்பகோணம்.
,, எ. ராகவாசார்யர், கும்பகோணம்.
,, எம். எஸ். கிருஷ்ணமாச்சாரியர், ஸ்ரீரங்கம்.
,, எஸ். யாமுனதாத்தாசார்யர், ,,
,, ஆர். ஸ்ரீநிவாஸாசார்யர், புதுக்கோட்டை.
,, எம். எஸ். சேஷய்யங்கார், எம். எல். ஏ. மதுரை.
,, என். ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், மதுரை.
,, ஆர். ரங்காசார்யர், திருநெல்வேலி.
,, ஜெ. வரதராஜ அய்யங்கார், ,,
,, வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ,,
,, வி. ஆர். ஸ்ரீசைல சக்ரவர்த்தி, கோயமுத்தூர்.
,, கிடாம்பி ராமாநுஜாசார்யர், மோஹனூர்.
,, கே. வி வெங்கடாசார்யர், நாமக்கல்.
,, வி. என். செல்லமய்யங்கார், சேலம்.
,, டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், ,,
,, கெ. டி. பார்த்தஸாரதி அய்யங்கார், வேலூர்.
,, ராவ்ஸாகிப் டி. எஸ். ஸ்ரீநிவாஸராகவாசார்யர், ஹைதராபாத்.
,, ஸ்ரீ. வாஸுதேவாசார்யர், மாம்பலம்.
,, கே. எஸ். சம்பகேச அய்யங்கார், திருவல்லிக்கேணி.

பத்திராதிபர்.

ஸ்ரீ. உ. வே. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமியே பத்ராதிபராக இருந்து வர வேண்டுமெனப் பிரார்த்திக்கப்பட்டார்.

## வித்வத் ஸம்மானம்.

இதற்காக உபகரித்த மஹான்கள் விஷயத்தில் நாம் விசேஷித்த க்ருதஜ்ஞதையை ஆவிஷ்கரிக்கவேண்டும். ஸ்ரீ அஹோபிலம் அழகிய சிங்கர், இந்த ப்ரவ்ருத்தியை அதிமாத்ரம் திருவுள்ளம் உகந்து அநுக்ரஹ ரூபமான ஸ்ரீமுகத்தை ப்ரஸாதித்ததுடன் ப்ரதி ஸம்வத்ஸரமும் இந்த விஷயத்திற்காக ஸ்ரீ ஸந்நிதியிலிருந்து ரூ. 50 கொடுப்பதாக நியமித்து, அந்த பிரகாரம் இந்த ஸம்வத்ஸரத்திற்காக ரூ. 50 நியமித்தார். ஸ்ரீ. உப. வி. வெங்கடரமண ஐய்யங்கார் ஸ்வாமி (கோயம்புத்தூர்) அத்யௌதார்யத்துடன் ரூ. 100 கொடுத்தார். ஸ்ரீ. உப. எஸ். வரதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. வேலூர் சின்னஸாமி ஐயங்கார் ஸ்வாமி முதலான ஆஸ்திகர்களும் இதைக் குறித்து விசேஷித்த உபகாரம் செய்தார்கள்.

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ॥

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஸ்ரீ. வை. ஸி. ஸபையின் வார்ஷிக மஹா ஸங்கம்.**

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் பதினெட்டாவது வார்ஷிக மஹா ஸங்கம், பூர்வம் செய்திருந்த ஸம்விதாந ப்ரகாரம், ஸ்ரீ மதுராந்தகத்தில் சென்ற சித்திரைமீ 9, 10உ களில் நடைபெற்றது. அதைப் பற்றிய அறிக்கை யொன்று ஸபையின் கார்யதர்சியால் எழுதப் பெற்று இந்த ஸஞ்சிகையில் மற்ருெரு பக்கத்தில் ப்ரசுரிப்பிக்கப்பட்டிருக்கின்றது. அந்த அறிக்கையிலிருந்து, இந்த ஸங்கம் யதாபூர்வம் ஆஸ்திகரெல்லாராலும் ஆதரிக்கப்பட்டு வருகின்றது என்பது நன்கு விளங்கும். அந்த ஆதரமே ஸங்கத்தில் குணம்சங்கள் இருக்கின்றனவென்பதற்கு முக்ய ஸூசகம்.

சென்ற ஸஞ்சிகையில், இந்த ஸங்கத்தில் சேரும் ஆஸ்திகர்களுக்கு நாம் ஒரு விசேஷ விஜ்ஞப்தியைச் செய்திருந்தோம். பாஷாந்தராப்யாஸத்தில் ப்ரவ்ருத்திக்கும் நமது பாலர்களுக்கு தேச கால வைகுண்யத்தால் நமது பெரியோர்களுடைய ஸதாசாரங்களின் பழக்கம் ஏற்படாமல் போய்விடுகிறதென்றும், அந்த ஆசாரங்களில் ஒருவித மஹிமையும் ச்ரேயஸ்ஸாம் இருக்கின்றனவென்று நாம் நம்பியிருப்பது உண்மையானல் அந்த ஆசாரங்களை லோபம் அடையவொட்டாமல் தடுக்க நாம் ப்ரயத்நப்படவேண்டியது அத்யவச்ய மென்றும், அப்படி அந்த லோபத்தைத் தடுக்கும் பொருட்டு இந்த ஸங்கம் தகுந்த உபாயங்களைத் தேடவேண்டு மென்றும் நாம் ப்ரார்த்தித்திருந்தோம். அந்த ப்ரார்த்தனையைக் கண்ணுற்ரே, இல்லாவிட்டால்

தாமாகவேயோ, சில ஆஸ்திகர்கள், நமது இஷ்டத்தை ஸாதித்துக் கொடுக்கக் கூடிய உபாயமொன்றை ஸங்கத்திற்கு விஜ்ஞாபித்துக்கொண்டதாகவும், அந்த விஜ்ஞாபநத்தை ஏக முகமாக ஸங்கம் ஆமோதித்ததாகவும், அதற்கு அநுகுணமான தீர்மானமொன்று ஸங்கத்தாற் செய்யப்பட்டிருக்கிறதாகவும் கார்யதர்சியின் அறிக்கையிலிருந்து நாம் அறிகிறோம். இது நமக்கு மிக்க ஆஹ்லாதத்தை ஜநிப்பிக்கின்றது. நமது பாலர்கள் நமது வைதிகாசாரங்களிலிருந்து ப்ரஷ்டர்களாய்ப் போவது முழுவதும் நம்முடைய ஔதாஸீந்யத்தாலேயே என்பது நமது நம்பிக்கை. நமது வைதிக ஸாதுக்களுடைய ஸம்ஸர்க்கத்தை அவர்களுக்கு நாம் ஸம்பாதித்துக் கொடுக்காமலும், அவைதிகர்களுடைய ஸம்ஸர்க்கம் பூர்ணமாக ப்ராப்தமாகும்படி அவர்களை நாம் அநாதரித்தும் வந்தால், அவர்கள் கெட்ட ஆசாரங்களுக்குப் பாத்ரமாகாமல் எப்படி யிருக்கக்கூடும்? வேடுவச்சேரி கிளிகள் இருப்பது போலவன்றோ அவர்கள் இருப்பது? மாதா பிதாக்கள் இருக்குமிடத்தை விட்டுவித்யார்த்திகளாய்ப் பத்தநங்களில் போய் வஸிக்கும் நமது பாலர்களுக்கென்று நாம் வைதிகாசாராநுஸாரியான போஜநசாலை முதலியவைகளை ஏற்படுத்துவதும், வைதிகராயும் வித்வாங்களாயுமுள்ள ஸாத்விகர்களைக்கொண்டு அவர்களுக்கு அநுஷ்டாந முகேந ஸதாசாரப் பயிற்சியைச் செய்து வைப்பதும் நமது ஆசார ஸம்ரக்ஷணத்திற்குத் தகுந்த உபாயங்களே. இந்த உபாயங்களைக் கைப்பற்றுவதாக நிச்சயம் செய்திருக்கும் ஸங்கத்தின் தீர்மானத்தை நாம் மிகவும் ஆமோதிக்கிறோம்.

நமது கந்யகைகளின் விவாஹ விஷயமாகச் சீர்திருத்தங்களைச் செய்ய முயலும் சில ப்ராந்தர்களுடைய ப்ரயத்நத்தைப்பற்றி இந்த ஸங்கம் செய்திருக்கும் தீர்மானத்தைப் பார்க்கும் பொழுதும் நமக்கு மிக்க ஸந்தோஷம் ஜநிக்கின்றது. கேவலம் அபிநிவேசத்தைக் கொண்டு நாம் ஒருவித நிர்ணயத்தைச் செய்யக்கூடாதென்றும், நமது பரிபந்திகள் சொல்லும் வார்த்தையை நிஷ்பக்ஷபாதமாகவும் ஆக்ரஹமற்றும் குண தோஷ விசாரம் செய்ய வேண்டுமென்றும், நாம், இந்தச் சீர்திருத்தக்காரர்களாற் சொல்லப்படும் உக்திகளைப் பலதடவை தீர்க்கமாக ஆலோசித்துப் பார்த்தோம். அப்படி ஆலோசித்துப் பார்க்கப் பார்க்க, அவை நமது ச்ரேயஸ்ஸுக்கு அதிமாத்ரம் விருத்தங்களே என்னும் தோற்றம் பலப்படுகின்றதே தவிர அவைகளில் குண லேசமும் இருப்பதாகக் கொஞ்சமேனும் தெரியவில்லை. ஹிதாந்வேஷிகளாயிருக்கும் அந்தச் சீர்திருத்தக்காரர்கள், ப்ராந்தர்களாய் அஹிதத்தை விளைவிக்கிறார்களே என்று மாத்ரம் நமக்கு சோகம் ஜநிக்கின்றது.

"யாவத்³தேஶ ஶாஸ்த்ராணாம் ஸௌஹ்ருத்³பி⁴:
ஸங்கத்ய ஸஜ்ஜனை: பரிபால்யந்தே காலத: ।
நிக்³ருஹ்ய ராஜா பரிரக்ஷிதவ்யா
ஸம்ஸ்தை யதா²யா தே³வபதிநா க்³ருஹீத: ॥"

என்கிறபடி அகார்யத்தில் ப்ரவ்ருத்திப்பவர்களை, உண்மையாக ஸௌஹ்ருத்துக்களாயிருப்பவர்கள் பலாத்கரித்தாவது அடக்கவேண்டியது அவசியமான தால், ஸங்கம் தீர்மானித்திருக்கிறபடி இது விஷயத்தில் நாம் முதலில் ஸாந்த்வ புரஸ்ஸரமாக அவர்களுக்கு தர்மத்தை உபதேசிப்பதுடன், அந்த உபதேசம் வீணுகி அவர்கள் தாம் இச்சிக்கிறபடி சட்டத்தை ஏற்படுத்தி விட்டால் நாம் அஸாந்த்வமாகவும் ப்ரவ்ருத்தித்து அந்தச் சட்டத்தை ரத்து செய்ய முயல வேண்டியதும் அவசியமேயாகும். அது விஷயத்தில் ஸங்கத்தினுடைய ஹார்த்தமான அநுமதியும் ஸஹாயமும் நமக்குக் கிடைக்கும் என்பதில் எவ்வித ஆக்ஷேபமும் இல்லை.

மற்றைப்படி ஸங்கத்தில் நடைபெற்ற உபந்யாஸங்கள் விஷயமாகவோ ஸங்கத்திற்கு எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுக்குச் செய்யப்பட்ட உபசாராதிகள் விஷயமாகவோ நாம் அஸந்துஷ்டியுடன் சொல்லக்கூடிய வார்த்தை ஒன்றுமில்லை. சில உபந்யாஸங்கள் தத்வ விஷயங்களை விசாரித்து அந்தத் தத்வத்தின் அர்த்தங்களைப் போதிப்பித்தது போல, மற்றும் சில உபந்யாஸங்கள் ஸ்ரீ பகவானுடைய கல்யாண குணங்களையும் அவனுடைய திவ்ய சேஷ்டிதங்களையும் ரஞ்ஜகமாக விவரித்துக்கொண்டு ஸப்யர்களுக்கு மிக்க ஆநந்தத்தை ஜநிப்பித்தன. பிந்ந ருசிகளான ஜநங்களடங்கியுள்ள மஹாஸங்கங்களுக்கு எல்லா ரஸங்களும் அபேக்ஷிதங்களே. இந்த ஸங்கத்தை நடத்தி வைக்கும் பாத்தை வஹித்த ஸ்ரீ மதுராந்தக வாஸிகளான நமது ஸௌஹ்ருத்துக்களின் அநந்ய ப்ரயோஜநமான பரிச்ரமமும் அவர்களுடைய உத்ஸாஹமும் அதிமாத்ரம் ஆச்சர்யாவஹங்களாக இருந்தன. இம்மாதிரியான ஸங்கங்கள் வேறு ஒருவித பலத்தையும் விளைவிக்காமற் போனாலும், அநந்ய ப்ரயோஜநமான கைங்கர்யத்திற்கு அவை ஒருவித அவகாசத்தைக் கொடுக்கின்றன வென்பது மாத்ரமே அவைகளின் சாரிதார்த்யத்திற்குப் போதுமானது. நாம் அர்த்திக்கவேண்டிய ஸகல ச்ரேயஸ்ஸும் அப்படிப்பட்ட அநந்ய ப்ரயோஜநமான ஸத்விஷய ப்ரவ்ருத்தி யொன்றையே மூலமாகக் கொண்டதன்றோ? ஸ்ரீ சரண்யன், இந்த ஸங்கங்களை எப்பொழுதும் ஸாத்விகமான மார்க்கத்தில் ப்ரசோதநம் செய்துகொண்டு உத்தரோத்தரம் அவைகள் அபிவ்ருத்தமாகும்படி அநுக்ரஹிக்க வேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.